செ.வெ.எண்: 238 நாள்:11.04.2018

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் மூலக்கரைபட்டி பகுதியில் 2ம் கட்ட வெள்ள நீர் கால்வாய் முடிவடைந்து 3ம் கட்ட பணிகள் தொடங்கப்படவுள்ள கால்வாய் பகுதியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

-----

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் மூலக்கரைபட்டி பெருமாள் நகர் பகுதியில் தாமிரபரணி ஆற்றுடன் கருமேனியாறு, நம்பியாறு ஆகிய ஆறுகளை இணைக்கும் வெள்ள நீர் கால்வாய் திட்டத்தில் 2ம் நிலை பணிகள் முடிவடைந்துள்ள 3ம் கட்ட பணிகள் தொடங்கப்படவுள்ள கால்வாய் பகுதியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.04.2018) ஆய்வு செய்தார். ஆய்வின் போது இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.இன்பதுரை உடனிருந்தார்.

கால்வாய் பகுதியை ஆய்வு செய்த பின்பு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தாமிரபரணி ஆற்றுடன் கருமேனியாறு, நம்பியாறு ஆகிய ஆறுகளை இணைத்து தாமிரபரணி ஆற்றின் உபரிநீரினை கன்னடியன் கால்வாயிலிருந்து வெள்ள நீர் கால்வாய் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரி, இராதாபுரம் உள்ளிட்ட 5 தாலுகா பகுதிகளும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சாத்தான்குளம் பகுதியில் உள்ள 52 கிராமங்கள் 23,040 ஹெக்டேர் விவசாய நிலம் பயன்பெறும் வகையில் 75கி.மீ நிளத்திற்கு 4 கட்டங்களாக வெள்ள நீர் கால்வாய் அமைக்கப்பட்டு வருகிறது. மணிமுத்தாறு பகுதியிலிருந்து முதல் மற்றும் இரண்டாம் கட்ட பணிகள் 39 கிலோ மீட்டர் கால்வாய் பணிகள் 90 சதவீதம் ரூ.213 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது. 3ம் கட்ட பணிகள் நாங்குநேரி வட்டம் அ.சாத்தான்குளம், ராமகிருஷ்ணாபுரம், மூலக்கரைபட்டி, சிந்தாமணி, முனைஞ்சிபட்டி, காடான்குளம் - திருமாலாபுரம், விஜயநாராயணம், இலங்குளம் ஆகிய கிராமங்கள் வழியாக 13 கிலோ மீட்டர் தூரத்திற்கு நில அளவை பணிகள் முடிவுற்றுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் இப்பணிகளை விரைந்து முடிக்க உத்தரவுவிட்டுள்ளார். ஒவ்வொரு மாதமும் ஆய்வு கூட்டத்தில் இப்பணிகள் நிலை குறித்து ஆய்வு செய்து வருகிறார். புதிய நில எடுப்பு சட்டத்தின்படி தற்போது தனிநபர் பேச்சு வார்த்தையின் மூலம் நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. புதிய நில எடுப்பு சட்டத்தின்படி விவசாயிகளுக்கு பணம் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 3ம் கட்ட பணிகள் இந்த ஆண்டு ரூ.100 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளது. 18 மாத காலத்தில் பணிகள் முடிக்கப்படும். தொடர்ந்து 4ம் கட்டமாக 23 கிலோ மீட்டர் கால்வாய் பணிகளுக்கு நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் விரைவாக நடைபெற தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு செயற்பொறியாளர் திரு.ஞானசேகரன், உதவி செயற்பொறியாளர்கள் திரு.நாகராஜ், திருமதி.ஜெயசுதா, திரு.கணபதி ரமேஷ், திரு.வேலைய்யா, உதவி பொறியாளர் செல்வி. நந்தினி, திருமதி.விசாலாச்சி, திரு.ராமகிருஷ்ணன் முக்கிய பிரமுகர்கள் திரு.ஆழகாநந்தம், திரு.அந்தோணி அமலராஜா, திரு.முருகேசன், திரு.எட்வட்சிங், திரு.கல்யாணசுந்தரம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.